செ.வெ.எண்: 12 நாள்: 05.01.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தகுதியுள்ள அனைத்து விவசாயிகளையும் பயனாளிகள் பட்டியலில் சேர்க்கும் பணியினை விரைவாக முடிக்க வேண்டும். வறட்சி பாதிப்பு குறித்த ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வறட்சி நிவாரண பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (05.01.2017) துவக்கி வைத்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் அக்டோபர் 1 முதல் டிசம்பர் 31ம் தேதி வரை வடகிழக்கு பருவமழை காலமாகும். இந்த பருவமழை காலத்தில் சராசரியாக 440 மி.மீ மழை கிடைக்கப்பெறும். ஆனால் நடப்பாண்டில் 168.3 மி.மீ மழையே கிடைக்கப்பெற்றது. இதனால் மாநிலம் முழுவதும் வறட்சி சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் மத்திய அரசின் புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கும் வகையில் வறட்சி பாதித்த இடங்களை நேரடி ஆய்வு செய்து பயிர் நிலவரங்கள் மற்றும் வறட்சி நிலை குறித்து தமிழகஅரசிற்கு அறிக்கை அளித்திட மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளை மேற்பார்வையிட்டு அறிக்கை அளிக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் கொண்ட குழுக்களை தமிழகஅரசு அமைத்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்திற்கு திரு.ப.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்களை தமிழகஅரசு அலுவலராக நியமனம் செய்துள்ளது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் வறட்சி நிவாரணப்பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தோட்டக்கலைத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆய்வில் வருவாய்த்துறை மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் இணைந்து தங்களது பகுதிகளில் நீரின்றி கருகிய பயிர்கள் குறித்த விபரங்களை உடனடியாக தயாரித்து வழங்கவும், ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பொதுமக்களுக்கு குடிநீரினை தடையின்றி வழங்கும் வகையில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், பழுதடைந்த மின்மோட்டார்களை சரிசெய்தல், புதிய குடிநீர் குழாய்களை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும், வறட்சி பாதிப்புகள் குறித்த அனைத்து விபரங்களையும் இன்று (05.01.2017) முதல் 09.01.2017 வரை ஆய்வு செய்து அறிக்கை அளிக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தகுதியுடைய அனைத்து விவசாயிகளையும் வறட்சி பாதிப்பு பட்டியலில் சேர்க்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் கீழப்பழுவஞ்சி கிராமத்தில் திரு.ஆண்டியப்பன், திரு.மாரியப்பன் ஆகிய விவசாயிகளின் வயல்கள் மற்றும் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளூர் கிராமத்தில் உள்ள விவசாயிகளின் வயல்களில் மழை நீரின்றி கருகிய பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆப., இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.அண்ணாமலை, கூட்டுறவு சங்க நிர்வாகிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**